**இலங்கை தர நிர்ணய நிறுவனம் - 2023**

-------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் (''நிறுவனம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்கான தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்ளினூடாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.தே.க.ச) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கு அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள ˙, தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவனத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | குறித்த நியமத்துடன் தொடர்புடனான இனக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 பிரகாரம் இருப்பு, கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதியை காண்பிக்க வேண்டிய போதும் 2023 திசெம்பர் 31 திகதி இருப்பின் தேறிய தேறக்கூடிய பெறுமதியை மதிப்பீடு செய்யாது இருப்பு ரூபா 12,544,291 ஆன கிரயத்தில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 திசெம்பர் 31 திகதி இருப்புக்களை கிரயத்தின் மீது இறுதிக் கணக்கில் காட்டுவதுடன் தேறிய தேறக்கூடிய பெறுமானத்தின் மீது மதிப்பீடொன்றை இதுவரை மேற்கொள்ளவில்லை என மற்றும் எதிர்காலத்தில் மிகவும் குறைந்த பெறுமானத்தை பிரதிபழிக்க நடவடிக்கை எடுப்பதென. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 பிரகாரம் இருப்பு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கடன்படுனர் மீதிகள் அதன் காலக்கழிவு செய்த பெறுமானத்தில் காட்டப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டு 2023 திசெம்பர் 31 திகதியன்று நிலவிய, 09 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவிவரும் ரூபா 19,840,442 ஆன கடன்படுனர் மீதிக்காக குறைபாட்டு சோதனையொன்று செய்யப்பட்ட கொண்டு செல்லும் பெறுமானத்தை காட்ட நடவடிக்கை எடுக்காது அந்த கால வீச்சளவில் ரூபா 198,400 மாத்திரம் ஐயக்கடனாக ஒதுக்கப்பட்டிருந்தது. | கடன்படுனர் தொடர்பாக குறைபாட்டு சோதனையை மேற்கொள்ள முன்னர் பதிவழிக்க முடியுமான கடன்படுனர்களை புத்தகங்களில் இருந்து பதிவழிக்க வேண்டும். அதற்காக கடன்படுனர் காலப் பகுப்பாய்வு உள்ளடங்களாக நிலுவை கடன்படுர் தொடர்பாக அனைத்து தகவல்களும் ஆலோசனை பெற்றுக் கொள்ள திறைசேரி முகவரிற்கு சமர்பித்துள்ளதென. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 பிரகாரம் நீண்ட காலமாக அறவிடப்படாதுள்ள கடன்படுனர் மீதிக்காக குறைபாட்டு பரிசோதனை ஒன்றை செய்து கொண்டு செல்லும் பெறுமதியில் காட்ட வேண்டும். அவ்வாறே அறவிட இயலுமான கடன் மீதியை அறவிட முன்நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம் ஆண்டு 01 முதல் 04 ஆண்டு வரையான கால விச்சளவில் இனங்காணாத வைப்புக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 9,923,267 இனை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்குரிய இனங்காண முடியுமான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்துள்ளதென மற்றும் மேலும் இனங்காண முடியாத வைப்புக்கள் எஞ்சியுள்ளதென. 2022 மற்றும் 2023 தொடர்பாக மில்லியனிற்கு கிட்டியளவை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதுடன் எஞ்சிய வைப்புக்களை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | நிறுவன வங்கிக் கணக்கிற்கு கிடைக்கும் அனைத்து வருமானங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகளை இனங்கண்பதற்கு பொருத்தமான ஒழுங்குமுறை ஒன்றை அறிமுகப்படுத்தி அதனூடாக வருடாந்த வருமானத்தை சரியாக இனங்காண வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதி நிறுவன டொலர் கணக்கின் மீதி USD 61,547 (ரூபா 19,643,956) ஆன போதும், அத்திகதி வங்கி இணக்கக் கூற்றில் USD 58,044 (ரூபா 18,525,779) ஆன மீதியை நிதிக்கூற்றுக்களில் காண்பித்த காரணத்தால் டொலர் கணக்கின் மீதி மற்றும் செலாவனி இலாபம் ரூபா 1,118,413 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 திசெம்பர் 31 திகதி வங்கியிலுள்ள 58,044 ஆன டொலர் அளவு அத்திகதியில் காணப்பட்ட செலாவனி விகிதத்தில் மீது நிதிக்கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளதென. | பேரேட்டு கணக்கு மற்றும் வங்கி இணக்கக் கூற்றை இணக்கம் செய்து, இணக்கத்தின் பிரகாரம் சரியான மீதியை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 ஆண்டிற்காக 2024 ஆண்டில் செலுத்திய ரூபா 1,729,166 செலவுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கி இருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த செலவை உரிய நேரத்திற்கு செலுத்தி நிறைவு செய்ய மற்றும் இவ்வாறான விடுபடல்கள் இடம்பெறாதிருக்க பொறுப்பேற்பததென. | ஆண்டின் அனைத்து செலவுகளையும் கணக்கீடு செய்ய முடியுமானவாறு உள்ளக கட்டுப்பாடொன்றை பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | 2022 மற்றும் 2024 ஆண்டுகளிற்குரியதாக 2023 ஆண்டில் கிடைத்த கூட்டுத் தொகை ரூபா 14,226,329 வருமானம் உரிய கணக்குகளில் செம்மையாக்கல் செய்யாது மீளாய்வாண்டு நிதி செயலாற்றல் கூற்றில் செம்மையாக்கப்பட்டு இருந்தது. | ஆண்டின் இறுதி 6 மாதங்களிற்குரிய செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருந்ததுடன் 2024 ஆண்டிற்குரிய செம்மையாக்கல்கள் மற்றும் 2023 ஆண்டின் முதல் 6 மாதங்களிற்குரிய செம்மையாக்கல் 2024 ஆண்டில் செய்யப்படுவதென. | வருடத்திற்குரிய அனைத்து வருமானங்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்ய முடியுமானவாறு சக்திவாய்ந்த உள்ளக கட்டுப்பாட்டொன் பயன்படுத்த வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமானங்களுடன் இணக்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 இன் 01/2020 இலக்க பொது நிதி சுற்றறிக்கை மூலம் திருத்திய நிதிப் பிரமாணம் 756 (6) | 2023 ஆண்டிற்குரிய பண்டக கணிப்பீட்டு நடவடிக்கையை நிறைவு செய்து அறிக்கை சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பண்டக கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் குறித்த காலத்தில் உரிய பணிகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 780 மற்றும் 2015 மே 25 இன் 1/2015 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.1 பந்தி | அரச வேலைகள் மற்றும் சேவைகளை மேற்கொள்ளும் போது சிக்கனமாக மற்றும் வினைத்திறனாக அவற்றை மேற்கொள்வது தொடர்பாக கவனத்திற் கொள்ளாது பொது முயற்சிகள் திணைக்களத்திலிருந்து கிடைத்த விசேட அனுமதிக்கும் முரணாக நடத்தர அலுவலர்களிற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக 2023 மே மற்றும் ஜுன் மாதங்களிற்காக கூட்டுப் பெறுமதி ரூபா 5,021,100 தொகை 12 சந்தர்பங்களில் தனியார் தரப்பினரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்திலுள்ள பழைய வானம் பழுதடைந்ததாலும் நிறுவனத்தின் அவசர கடமை பணிகளின் காரணமாகவும் நிறுவன சேவைகளை தொடந்து பேணிச் செல்லும் தேவைப்பாட்டின் காரணமாகவும் வெளி வாகனங்களை பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்ட உடன்படிக்கை காலத்தை நீடிக்க நேரிட்டதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகன் மற்றும் உரிய அனுமதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2022 திசெம்பர் 14 இன் 2310/29 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுறித்த அரச சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிகளின் கீழ் XII பிரிவின் (அரச அலுவலர் ஒருவரை விடுவித்தல்) 172 ஆம் பிரிவு. | தகுதிகான் காலத்திலுள்ள இரண்டு அலுவலர்களை இரண்டாம் நிலை அடிப்படையில் நிறுவன சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டு இருந்தனர். | நிறுவன அங்கீகார ஆளணியில் அதிக வெற்றிடங்கள் காணப்படல் மற்றும் கடமை தேவைப்பாட்டின் காரணமாக வரிசை அமைச்சின் மூன்று அலுவலர்களை இணைத்துக் கொண்டதுடன் அதில் இருவர் நிருவாக உத்தியோகத்தர் பதவிக்கும், ஒருவர் உதவி பணிப்பானர் பதவிக்கும் கடமை மேற்கொள்ள தற்காலிகமாக இணக்கப்பட்டுள்ளதென. | இரண்டாம் நிலை அடிப்படையில் தகுதிகாண் காலத்தில் உள்ள ஊழியர்களை ஆட்சேர்கக் கூடாது. அவ்வாறு கடமை ஒப்படைக்கும் போது நிறுவன வழமையான ஊழியர்களின் இயலுமை மற்றும் தகைமையும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 தகவல் தொழிநுட்ப (IT) பொதுக் கட்டுப்பாட்டு முறை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,800,000 செலவில் 2022 செப்டம்பர் மாதம் முதல் செயற்படுத்தியிருந்த கணனி மென் பொருள் தொகுதியின் குறைபாடுகள் 2024 ஜுலை 30 திகதி வரை பிழையாக காணப்பட்டது. | இந்த மென் பொருட்கள் இன்னம் பரீட்சிப்பு கட்டத்தில் காணப்படுவதென. | கணனி மென்பொருள் தொகுதியை விரைவில் சீராக்கிக் கொள்ள தொடர்புடைய நிறுவனத்துடன் வினவி பொறுத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

# 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 429,013,188 ஆன இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 176,704,353 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 252,308,835 ஆன வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. ஆண்டின் மொத்த செயற்பாட்டு செலவுகள் மற்றும் திறைசேரிக்கு செலுத்திய தொகை முறையே ரூபா 93,060,363 இனால் மற்றும் ரூபா 43,011,306 இனால் அதிகரித்திருந்த போதும் செயற்பாட்டு இலாபம் மற்றும் தேறிய நிதி வருமானம் முறையே ரூபா 321,238,429 இனால் மற்றும் 73,851,858 இனால் அதிகரித்த போதும் செயற்பாட்டு வருமானம் மற்றும் தேறிய நிதி வருமானம் முறையே ரூபா 321,238,429 இனால் மற்றும் 73,851,858 அதிகரித்தமை இந்த வளர்சிக்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தின் 05 ஆய்வுகூடங்களில் தற்போது வெளியிட வேண்டுமென இனங்கண்டுள்ள 147 உபகரண உருப்படிகளை 2024 ஜுலை 15 கணக்காய்வு திகதி வரை வெளியிட தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த உருப்படிகள் 20 ஆண்டுகளை விட பழையதாகையால் அதனை கொள்வனவு செய்த ஆண்டு மற்றும் கிரயம் போன்ற தகவல்களை சமர்பிக்க முடியாதுள்ளதாக மற்றும் எதிர்காலத்தில் அந்த உருப்படிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதென. | பாவிக்காத பொருட்களை அகற்ற மற்றும் அவற்றை சரியாக அறிக்கையிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | SLS சின்னத்தை பயன்படுத்த அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது தொடர்ந்து, உற்பத்திகள் உரிய தரத்துடன் இணங்குவதனை உறுதிசெய்வதற்காக தரபடுத்தல் தொகுதியை திருப்திகரமாக செயற்படுத்துதல் மற்றும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளிற்கு இணங்குவதனை ஒப்பாய்வு செய்வதற்காக திறந்த சந்தையிலிருந்து உற்பத்திகளின் மாதிரிகளை பெற்று விவரக்குறிப்புக்களின் இணக்கத்தை சரிபார்க்க சோதனைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறாயினும், 2023 திசெம்பர் 31 திகதி தர நிர்ணய சான்றிதழ் சின்னத்தை பெற்றிருந்த பொருட்களின் எண்ணிக்கை 924 ஆன போதும் மீளாய்வாண்டில் சந்தை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது 183 வகையான பொருட்களிற்காகும். அதாவது 20 சதவீதம் மாத்திரமே. | SLS சான்றிதழ் முறையின் கீழ் உற்பத்தி இணக்கப்பாடு மற்றும் செயன்முறை இணக்கப்பாடு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதுடன் அதற்காக தொழல்சாலைகளினுள் தொடர்ந்து பின்னூடல் கணக்காய்வை செய்வதாக மற்றும் மேலும் உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்த எழுமாறாக சந்தை மாதிரிகள் பெறப்பட்டு பரீட்சிக்கப்படுவதென. | உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்து சந்தை மாதிரிகள் பெற்று உற்பத்திகளின் தர நிர்ணயத்தை பரீட்சிக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் 2020 ஆண்டில் திருத்திய இலக்கம் 896 : 2020 தரநிலையை பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்ட சிவப்ப பருப்பினை சோதனை செய்வதுடன் அந்த தரநிலையின் 6.2 இல் குறிப்பிடுவதன் பிரகாரம் பௌதீக தேவைப்பாட்டின் சேர்க்கப்பட்ட நிறப் பொருட்கள் சோதனை (AOAC 988.13 & HPLC) செய்வதற்கு தேவையான வசதிகள் இல்லாத காரணத்தால் நிறம் தொடர்பான சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி ஆய்வுகூடத்திற்கு பின்பற்ற முடியுமான சோதனை முறையொன்றை உட்படுத்த தரநிலையை திருத்துமாறு அறிவுருத்தியதென. | திட்டவட்டமான சோதனைகளை ஒழுங்குமுறையாக மேற்கொள்ள தேவையான வசதிகளை விரைவில் வழங்க வேண்டும். |
| (ஆ) | இலங்கையில் சிவப்பு சீனி உற்பத்தி செய்யும் 04 உள்நாட்டு நிறுவனங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அந்த எவ்வித உற்பத்தியினாலும் தர நிர்ணய சான்றிதழை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | SLS கட்டாயப்படுத்தும் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பாவனையாளர் விவகார அதிகாரசபை ஆகையால் SLS சின்னத்திற்கு விண்ணப்பிக்குமாறு இந்த நிறுவனங்களிற்கு அறிவித்துள்ளதென. | இலங்கை தர நிர்ணய சான்றிதழ் கட்டாயமான போதும் இதுவரை அதனை பெற்றுக் கொள்ளாத நிறுவனங்களிற்கு அது பற்றி அறிவுருத்தி நுகர்வோர் விவகார அதிகாரசபைளுடன் தொடர்சியாக தகவல்களை பரிமாற்றிக் கொள்ள வேண்டும். |
| (இ) | நுகர்வோர் விவகார அதிகாரசபைளின் தகவல்களின் பிரகாரம் 28 வியாபாரக் குறிகளின் கீழ் ரின் மீன் சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட போதும் அதற்கிடையில் SLS சான்றிதழ் பெற்றிருந்தது 15 வியாபாரக் குறிகளிற்கு மாத்திரமே ஆகும். அதன் பிரகாரம் 13 ரின் மீள் வியாபாரக் குறிகளிற்கு SLS சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. | தர நிர்ணய நிறுவனத்தினால் 15 உற்பத்தியாளர்களின் 48 ரின் மீன் வியாபாரக் குறிகளிற்கு SLS சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. சில உற்பத்தியாளர்களிற்கு சில குறிகளிற்காக ஒன்றிற்கு மேற்பட்ட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனெ. | SLS சான்றிதழி கட்டாயம் மற்றும் சுய விருப்பின் பெயரில் SLS சான்றிதழ் பெற்றுள்ள பொருட்கள் பற்றி சரியான மற்றும் தொடர்ச்சியான் ஒழுங்குபடுத்தல் தேவையான போது தாமதமின்றி மற்றும் தொடர்சியாக பொறுப்புக் கூறக்கூடிய நிறுவனத்துடன் தொடர்புபட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உணவு ஆய்வுகூடத்திற்கு (Food Lab) ரூபா 495,000 செலவிட்டு அவசர இடர் சந்தர்பத்தில் விஞ்ஞானகூட அலுவலர்களிற்கு குளிக்க மற்றும் கைகளை கழிவிக் கொள்ள 2019 ஆகஸ்ட் 06 திகதி கொள்வனவு செய்திருந்த Shower and Eye wash உபகரணத்தை கணக்காய்வு திகதிய 2023 நவம்பர் 17 திகதி வரை பயன்படுத்த முடியுமானவாறு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | இடவசதி குறைவாக உள்ளமை மற்றும் நீர் குழாய்களை வழங்கி பூரணப்படுத்தாத காரணத்தால் இதனை பொறுத்தவில்லையென. | பாதுகாப்பு செயன்முறையாக குறித்த உபகரணங்களை உரிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி ஆய்வுகூட ஊழியர் தேவைப்பாட்டை பூரணப்படுத்த வேண்டும். |
| (ஆ) | நுண்ணுயிர் ஆய்வுகூடத்திற்கு (Microbiology Lab) சொந்தமாகவுள்ள Unido grant ஊடாக 2021 திசெம்பர் 31 திகதி நிறுவனத்திற்கு கிடைத்திருந்த ரூபா 1,748,663 ஆன 86 Arctiko Freezer (S/No – ULVF 651096008) உபகரணம் 2022 மார்ச் மாதம் முதல் செயலற்று நிலவியது. | தற்போது இந்த உபகரணத்தை தனியார் நிறுவனமொன்றிற்கு திருத்த வேலைக்காக அனுப்பியுள்ளதென. | பொருளாதார நலன்களை பெற்றுக் கொள்ள இயலுமானவாறு திருத்த வேலைகளை செய்து உபகரணத்தை பயன்படுத்த வேண்டும். |

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் ஆய்வுகூடத்திற்காக ரூபா 21,860,934 பெறுமதியான உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டி 3.1, 5.19 மற்றும் 5.20 இல் குறிப்பிடப்படும் வழிகாட்டுதலை பின்பற்றி இருக்கவில்லை. | இவ்வாறான சம்பவங்கள் இதன் பின்னர் இடம்பெறாதிருகக் தவிர்பு முயற்சிகள் எடுக்கப்படுமென. | பெறுகைகள் வழிகாட்டிகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகம் செய்யப்பட்ட அரசிற்கு சொந்தமான முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு முன்வைக்க வேண்டிய போதும் 2022 அண்டிற்குரிய வருடாந்த அறிக்கை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அமைச்சிற்கு வழங்கியுள்ளதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களினுள் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு முன்வைக்க வேண்டும். |